***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.

**OS.No. 17/2017**

P.W.1 திரு.பக்ருதீன் த/பெ.அப்துல் ரகுமான் நாள் – 02.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 13.04.2016ம் தேதி எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு நானும், மற்ற வாதிகளும் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . அந்த அறிவிப்பை பார்த்தால் என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த அறிவிப்பு என்றால் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆங்கிலத்தில் இருப்பதால் எனக்கு படிக்க தெரியாது, எனது வழக்கறிஞர் மோகன்ராஜ் என்பவர் தான். (சாட்சியிடம் ஆவணம் காட்டப்பட்டது.) அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் நானும் , மற்ற வாதிகளும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள வழக்குரையா என்றால் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான் .(சாட்சியிடம் வழக்குரை அசல் காட்டப்பட்டது). இதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் என்ன என்று வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி , 06.05.2016ம் தேதி எனது வழக்கறிஞர் மோகன்ராஜ் என்பவருக்கு பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு , அந்த அறிவிப்பு பெறப்படாமல் திருப்பப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. 1 முதல் 4 வாதிகளும் தனித்தனி வீட்டில் , தனித்தனி குடும்பமாக, தனித்தனி ஊரில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான் . முகமதிய சட்டப்படி பொதுக்குடும்பம் என்ற கோட்பாடு எதுவும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . பொதுக்குடும்பம் என்றால் எனக்கு என்ன என்று தெரியுமா என்றால் தெரியும் . பொதுக்குடும்பம் என்பது அனைத்து உறுப்பினர்களும் ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்வது தான் என்றால் சரிதான் . வாதிகளும், பிரதிவாதிகளும் பொதுக்குடும்பமாக வாழ்வதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல , அவர்களுக்கு தனித்தனி தொழில் இருப்பதால் தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம். எனது தாயார் உயிருடன் இருக்கும்வரை நாங்கள் ஒன்றாக தான் இருந்தோம். எனது தாயார் தான் எங்களது குடும்பத்தை பாதுகாத்து வந்தாரா என்றால் ஆமாம் . எனது தாயார் எத்தனை ஆண்டுகள் குடும்பத்தை பாதுகாத்து வந்தார் என்றால் எனது தந்தையார் இறந்ததிலிருந்து எனது அண்ணன் எங்களது குடும்பத்தை Takeover செய்தார், அப்போது எனது தாயாரும் எங்களுடன் இருந்து வந்தார் . எங்களது வழக்குரையில் எங்களது தந்தையாரின் இறப்பிற்கு பிறகு 1ம் பிரதிவாதியான எனது அண்ணன் அவருடைய மாமனார் வீட்டிற்கு சென்று வாழ்ந்து வந்தார் என்று சொல்லியிருப்பது தவறு தான் என்றால் அது தவறுதான் . எனது தந்தையார் இறந்ததற்கு பின்னிட்டு எங்கள் வீட்டில் இருந்த நகை, பணம் பொருட்களை எல்லாம் எடுத்துக்கொண்டு 1ம் பிரதிவாதி அவரது மாமனார் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் இல்லை, எங்கள் வீட்டில் தான் இருந்தார் . 1ம் பிரதிவாதி எனது தாயாரின் தூண்டுதலின்பேரில் எனது தகப்பனாரால் வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டு அவரது மாமனார் வீட்டில் தான் இருந்து வந்தார்

என்றும், எங்களுடன் இருக்கவில்லை என்றால் சரியல்ல . வழக்கு சொத்துக்கள் வானம் பார்த்த பூமி என்றால் பம்புசெட் இருந்தது , கிணறு இருந்தது. பம்புசெட் இருந்தது, கிணறு இருந்தது என்ற விவரத்தை வழக்குரையில் வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது . வழக்கு விவசாய சொத்துக்களில் இருந்து என்ன வருமானம் வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விவசாய நிலங்களில் நான் அனுபவத்தில் இல்லாததால் அதில் என்ன விவசாயம் செய்யப்படுகிறது என்றும் , அதில் என்ன வருமானம் வருகிறது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான் . விவசாய நிலங்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்திலும் , உரிமையிலும் உள்ளதா என்றால் பொதுவாக உள்ளது, ஆனால் தரிசாக உள்ளது. வழக்கு சொத்துக்களில் கண்டுள்ள விவசாய நிலங்களில் நானோ, மற்ற வாதிகளோ கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும் , அந்த சொத்துக்களில் நாங்கள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறி நீதிமன்றக் கட்டணம் செலுத்தியிருப்பது தவறானது என்றால் சரியல்ல . எனது தகப்பனார் நடத்தி வந்த அஹமது ஸ்டோரில் என்ன வருமானம் வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலங்களில் இருந்து வருமானம் வந்ததா ? இல்லையா? என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு அஹமது ஸ்டோர் மற்றும் விவசாய நிலங்களில் இருந்து அதிகமான வருமானம் வந்தது என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் என்னிடம் இல்லை , அந்த வருமானத்தை வைத்து தான் குடும்பம் நடத்தப்பட்டது . எனது தகப்பனாருக்கு அதிகப்படியான வருமானம் வந்ததற்கு வருமான வரி

செலுத்தியுள்ளாரா? அதற்கான ஆவணம் உள்ளதா என்றால் அதபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் நடத்தி வந்த கடை மூலம் அதிகமான வருமானம் எதுவும் இல்லை என்றும் , எனது தகப்பனார் சம்பாதித்த பணத்தை கொண்டு 1ம் பிரதிவாதி பெயரில் எந்த சொத்துக்களும் வாங்கப்படவில்லை என்றும், எனது தகப்பனாரின் சம்பாத்தியம் எனது தாயார் குடும்பத்தை நிர்வகிப்பதற்கு போதவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது சுய சம்பாத்திய பணத்தை கொண்டு , அவரால் கிரயம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றும், அது அவரது தனிப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல . அந்த சொத்துக்களுக்கும், எனது தந்தையாருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு அ–அட்டவணை சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான் . தாவா அ–அட்டவணை சொத்துக்களை வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி சேர்ந்து வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரியல்ல . தாவா வழக்குரை பத்தி 10ல் "2010ம் ஆண்டு SF No.660/7ல் 1 முதல் 4 வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி சேர்ந்து 871.2 சதுரடியாக 5 சம பாககங்களாக பிரித்துக்கொண்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு . தீன் முகமது என்பவருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்தில் அவர் தாவா தாக்கல் செய்வதற்கு 2 வருடங்களுக்கு முன்புவரை கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டிருந்தார் என்று எனக்கு வழக்குரையில் சொல்லியிருப்பதும் தவறானதா என்றால் தவறு தான் . அதில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் நானும் கடை கட்டி வாடகைக்கு விட்டிருந்தேன் என்று எனது வழக்குரையில் பாரா 10ல் சொல்லியிருப்பது தவறுதானா என்றால் எனது தாயார் வாடகை வாங்கி வந்தார் என்றும் , அவரது

இறப்பிற்கு பிறகு நான் வாடகை வாங்கி வந்தேன் என்று தான் சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை அவர் வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் எனது தாயார் தான் வாடகைக்கு விட்டார், எனது தாயாரின் இறப்பிற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி வாடகை வாங்கி வந்தார் . மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . வழக்கு ஆ–அட்டவணை சொத்து யாருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றும் , என்ன காரணத்திற்காக யாருக்கு கிரயம் கொடுக்கப்பட்டது என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . C, D, E, F, G, H அட்டவணை சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சொத்துக்களில் யார் யாருக்கு பாத்தியம் என்று தெரியும், ஆனால் C, D, E, F, H அட்டவணை சொத்துக்கள் என்னவாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது . தாவா C–அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ள பழைய சர்வே எண்.192/1, புதிய சர்வே எண்.660/11 – 2035 சதுரடி யார் யாருக்கு, எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் கொடுத்த சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . தாவா D–அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ள பழைய சர்வே எண்.154/A/1B, 4365 சதுரடி யார் யாருக்கு, எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் கொடுத்த சொத்து என்றால் அது எனக்கு தெரியாது. தாவா E–அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ள பழைய சர்வே எண்.210/8, 1.51–1/4 ஏக்கர் யார் யாருக்கு , எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் கொடுத்த சொத்து என்றால் அது எனக்கு தெரியாது . தாவா F–அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ள சர்வே எண் .32/1 to 32/7, 325/3A ஆகிய சொத்துக்கள் யார் யாருக்கு , எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் கொடுத்த சொத்து என்றால் அது எனக்கு தெரியாது. தாவா H–அட்டவணை

சொத்தாக காட்டப்பட்டுள்ள பழைய சர்வே எண்.299/7, 300/1, 300/5A, 303/3B, 304/5A ஆகிய சொத்துக்கள் யார் யாருக்கு, எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் கொடுத்த சொத்து என்றால் அது எனக்கு தெரியாது . தாவா I–அட்டவணை சொத்துக்கள் என்று அசையும் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், அது கற்பனையாக 1ம் பிரதிவாதி வசம் உள்ளதாக பொய்யாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா I–அட்டவணை சொத்துக்கள் 1ம் பிரதிவாதிவசம் உள்ளது என்று காட்ட ஆவணம் உள்ளதா என்றால் அந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதி எடுத்துச்சென்றுவிட்டார். நான் சொல்வதுபோல் ஆவணம் எதுவும் இல்லை என்றும், பொய்யாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா அ–அட்டவணை சொத்து 1 முதல் 4 வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிகளுக்குடையே வாய்மொழியாக பிரிக்கப்பட்டு அவரவர் தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், உண்மையை மறைத்து அந்த சொத்திலும் பாகம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா G அட்டவணை சொத்தை தவிர்த்து மற்ற தாவா அட்டவணை சொத்துக்களில் எனக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தாயாரால் அவரது கணவர் பெயரில் கிரயம் பெறப்பட்ட தாவா F அட்டவணை சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தாயாரின் வாரிசுகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனது தாயார் மூலம் பிறந்தவர்களுக்கு தாவா F அட்டவணை சொத்துக்களில் பாகம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல . வழக்கு B அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதியின் தாயாரின் வரதட்சனைக்காக கிரயம் கொடுக்கப்பட்டது என்றும், அதில் 1ம் பிரதிவாதியின் தாயாரின் வாரிசுகளுக்கும் பாத்தியம் உண்டு என்றால் சரியல்ல . வழக்கு சொத்தின்

அனுபவமோ, 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற விவரமோ , கிரயத்தொகையோ தெரியாது என்றும், 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்கள் எனது தந்தை கிரயப்பணம் கொடுத்து கிரயம் பெறப்பட்டதாக சொல்லி , பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் 1ம் பிரதிவாதி கிரயம் பெறப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. அதில் வாதிகளுக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் பாகம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல . 1ம் பிரதிவாதியின் தாயார் வாங்கிய சொத்துக்களில் எனக்கோ, எனது தாயாரின் வாரிசுகளுக்கோ பாகம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்களும் , அவரது தாயார் கிரயம் பெற்ற சொத்துக்களும் அவரது தனிப்பட்ட அனுபவத்தில் உள்ளது என்றும் , அவைகளையும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது தவறானது என்றால் சரியல்ல. வழக்குரையின் சொத்து விவரங்களோ, வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்களோ எனக்கு தெரியாத நிலையில், எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றும் , அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல . 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நானும், மற்ற வாதிகளுக்கும் அபகரிக்க வேண்டுமென்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1ம் வாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு பதிலுரை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது . நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதால் 1ம் பிரதிவாதியின் அதிகபட்ச செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*